2010 மே 6]
142—

கால்நடை மருந்தகம்

***344—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் கருத்தப்புலியம்பட்டியில் இயங்காத நிலையில் உள்ள அரசு கோழிப் பண்ணையில் கால்நடை மருந்தகம் அமைத்திட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கருத்தப்புலியம்பட்டி கோழிப் பண்ணையில் கால்நடை மருந்தகம் அமைத்திட அரசுத் தரப்பில் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியிலுள்ள கருத்தப்புலியம்பட்டியில், கடந்த 30 ஆண்டுகாலமாக கோழிப் பண்ணை இயங்கி வந்தது. கால்நடை பராமரிப்புத் துறைக்கு 2 ஏக்கர் சொந்த நிலம் அங்கு இருக்கின்றது. என்னுடைய வீட்டிற்குப் பின்னாலே 100 மீட்டர் தொலைவில்தான் அதனுடைய காம்பவுண்டு இருக்கின்றது. அதிலே கால்நடைகளுக்கு வைத்தியம் பார்த்து வந்தார்கள். கடந்த காலங்களிலே கோழிப் பண்ணை மூடப்பட்டுவிட்டது,. அதனால், கால்நடைகளுக்கு வைத்தியம் பார்க்க பல கிராமங்களிலே இருக்கின்ற மக்கள் சிரமப்படுகிறார்கள். கருத்தப்புலியம்பட்டி, பதினெட்டாங்குடி கிராமம், பல்லவெட்டி கிராமம், மில்கேட் கிராமம் போன்ற கிராமங்கள் நகரை ஒட்டியிருக்கின்றன. டவுனுக்கு வர வேண்டுமென்றால், 4 கிலோ மீட்டர் வரவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது, டவுனுக்குள் நெரிசலும் அதிகமாக இருக்கிறது. அதனால் கால்நடைகளைக் கொண்டு சென்று வைத்தியம் செய்ய முடியவில்லை. கருத்தப்புலியம்பட்டி பண்ணையிலே கட்டடங்கள் நிறைய இருக்கின்றன, பல கோடி ரூபாய் மதிப்புள்ள கட்டடங்கள்,*

[2010 மே 6

சாமான்கள் எல்லாம் அதிலே இருக்கின்றன, கோழிப் பண்ணை வைத்து இருந்த கட்டடம் அது. முன்னாள் அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் இருந்தபோது அந்தக் கோழிப்பண்ணை உருவாக்கப்பட்டது. அதிலே ஒரு கால்நடை மருந்தகம் அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதி விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும் என்பதால், அமைச்சர் அவர்கள் செய்து தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையானது, அந்தப் பகுதியிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, அப்பகுதியில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனை போன்றவற்றை அமைத்துத் தருகிறது. ஒரு கிராமத்தில் உள்ள கால்நடைகளின் அலகு எண்ணிக்கை 3 ஆயிரத்திற்கும் மேல் இருக்குமானால், அங்கு ஒரு கிளை நிலையம் அமைக்கலாம். ஏற்கெனவே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற கால்நடைக் கிளை நிலையத்திற்கும், தற்போது அமையப் போகும் கால்நடைக் கிளை நிலையத்திற்கும் குறைந்தபட்சம் 5 கிலோ மீட்டர் தொலைவாவது இருக்கவேண்டும். ஆனால், மதுரை மாவட்டம், கருத்தப்புலியம்பட்டி கிராமம், கோழி உருவாக்கும் நிலையத்திற்கு அருகில், அனைத்து மருத்துவ வசதிகளுடன்கூடிய சிகிச்சைக் கூடம் மற்றும் உள்நோயாளிகள் பிரிவுடன் 3 கிலோ மீட்டர் தூரத்தில் மேலூரில் கால்நடை மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. அரசு விதிமுறைகளின்படி கருத்தப்புலியம்பட்டியில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்கத் தற்போது வாய்ப்புகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் டவுன் 4 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது; அப்பகுதி மிகவும் நெரிசலாக இருக்கின்றது. அந்தப் பகுதியில் 5,000 பேருக்கு மேல் கால்நடைகள் வைத்திருக்கின்றார்கள். மக்கள் மாடுகளைப் பிடித்துக்கொண்டு, டவுனுக்குள் செல்ல முடியவில்லை. அங்கு, கார் மற்றும் வாகனங்கள் போக்குவரத்து நிறைய இருக்கின்றது.

2010 மே 6]

அதனால் கால்நடைகளைக் கொண்டு வர முடியவில்லை, அது தேசிய நெடுஞ்சாலை. அதனால் கருத்தப்புலியம்பட்டியில் பகுதி நேரக் கிளை நிலையமாவது ஆரம்பிக்கவேண்டும். அதைப்போல், நம்முடைய வெல்லூர்நாடு பகுதியில் புலிமலைப்பட்டி பஞ்சாயத்தில் வீட்டுக்கு ஒரு மாடு வைத்திருக்கிறார்கள். 5 ஆயிரம் மாடுகள் வைத்திருக்கிறார்கள்; அந்த ஒரே பஞ்சாயத்திற்கு உட்பட்டு 19 ஊர்கள் இருக்கின்றன. அங்கு ஒரு துணை நிலையமாவது நீங்கள் ஆரம்பித்துத் தர வேண்டும். தனியமங்கலம், கொட்டாம்பட்டி, மேலவளவு, மணப்பச்சேரி, வெள்ளாளப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள கால்நடை நிலையங்களைத் தரம் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். எ.வெள்ளாளப்பட்டி பேரூராட்சியில் கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் கொடுத்திருக்கிறார்கள். தும்பைப்பட்டி கிராமத்திலும் இடம் கொடுத்திருக்கிறார்கள் அங்கேயும் கால்நடை மருத்துவமனைக் கட்டடங்கள் கட்டுவதற்கும் இந்தப் புலிமலைப்பட்டியிலேயும், உறங்காம்பட்டியிலேயும் கால்நடை துணை மையம் அமைப்பதற்கும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 1962 ஆம் ஆண்டு மொத்தம் 23 இடங்களில் கோழி விரிவாக்க நிலையங்கள் அமைக்கப்பட்டன. அப்பொழுதெல்லாம் நாட்டுக் கோழிகள்தான் வளர்த்து வந்தார்கள். அதிகம் முட்டை தரும் white leghorn கோழிக் குஞ்சு இனத்தை விருத்தி செய்வதற்காக காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் விரிவாக்க நிலையங்கள் அமைக்கப்பட்டன. ஆனால், 31-1-2002-ல் இரண்டு நிலையங்களைத் தவிர அனைத்தையும் அப்பொழுது இருந்த அரசு மூடிவிட்டது. அதிலே உங்களுடைய ஊரிலேயுள்ள அந்த நிலையமும் ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நானும் அதிகாரிகளிடம் கேட்டிருக்கிறேன். வேண்டுமென்றால் மேலவளவில் இருக்கின்ற மருத்துவமனையை இந்த ஆண்டு தரம் உயர்த்துவதற்கு முயற்சி செய்கின்றோம்.

[2010 மே 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

முற்பகல் 9-40

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் உபகோட்டத்திற்குட்பட்ட பகுதியில் நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்காக 4 சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியளித்து வாகனம் வாங்கப்பட்டது. இரண்டு ஆண்டுகள் ஆகியும் அதற்குரிய ஓட்டுநர் மற்றும் மருத்துவர் நியமிப்பதற்கும், மருந்து வழங்குவதற்குமுரிய அரசாணை வெளியிடவில்லை. அந்த அரசாணை துரிதமாக வெளியிடப்படுமா? நாகர்கோவில் கால்நடைத் துணை இயக்குநர் அலுவலகத்திற்கு வாகனம் இல்லாததால் கால்நடை மருத்துவப் பணிகளில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அதற்கு வாகனம் வழங்கவும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வழங்கப்பட்ட வாகனத்திற்கு நிச்சயமாக ஓட்டுநர் விரைவிலே அரசின் மூலமாக நியமிக்கப்படுவார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், நீங்கள் கோழிப் பண்ணைப் பற்றி என்ன கேட்கப் போகிறீர்கள்?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கிறேன். அரசுக் கோழிப் பண்ணைகள் இலாபகரமாக இயங்காத காரணத்தால் பல இடங்களில் மூடப்பட்டிருக்கின்றன. கால்நடைகள் நாட்டிலே வாழ்கிற மக்களுக்கு அடிப்படைத் தேவையாக இருக்கின்றன. மூடப்பட்ட கோழிப் பண்ணைகள் இருந்த இடத்தில் அனைத்து வசதிகளுடன் கட்டடங்களும் இருக்கின்றன. எனவே, கால்நடை பகுதிநேர மருத்துவமனைகளை முழுநேர மருத்துவமனைகளாக மாற்றி, அந்தக் கோழிப் பண்ணைகளை இருக்கிற இடங்களிலேயே சரியாகச் செய்ய அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

2010 மே 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னதுபோல, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே அமைக்கப்பட்ட கோழி விரிவாக்க நிலையங்கள் 21-ஐ உங்களுடைய ஆட்சிக் காலத்திலே மூடிவிட்டீர்கள். இப்போது அந்த இடங்களை வேறு உபயோகத்திற்காகப் பயன்படுத்தலாம். குறிப்பாக, கால்நடை சம்பந்தமான உபயோகங்களுக்காக, அருகிலே கால்நடைக் கிளை நிலையங்கள் இல்லாமல் இருந்தால், அவற்றை கால்நடைக் கிளை நிலையங்களாக அமைக்கலாம். ஒருவேளை கால்நடைக் கிளை நிலையங்கள் இருந்தால், வேறு ஏதாவது உபயோகத்திற்கு இந்தத் துறை அந்த இடங்களைப் பயனபடுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம்.*

திரு. ஆர். சிவானந்தம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதியில் ஆரணி-செய்யாறு சாலையில், சத்தியவிஜயநகரம் அருகில் தசராப்பேட்டை என்ற கிராமத்தில் சுமார் 5 ஏக்கர் அரசு நிலத்தில் ஏற்கெனவே கோழிப் பண்ணை நடந்து வந்தது. இடையிலே வந்த ஆட்சி அதை மூடிவிட்டது. மீண்டும் 1996-2001 ஆம் ஆண்டில் கலைஞர் ஆட்சி இருந்தபோது அங்கே முயல் பண்ணை அமைக்கப்பட்டு, செயல்பட்டது. அடுத்து வந்த ஆட்சி அதையும் மூடிவிட்டது. எனவே, மீண்டும் அந்த முயல் பண்ணையைத் துவக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் அளித்த பதிலிலேயே இதற்கான விடை இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.*

[2010 மே 6

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி ஜவ்வாது மலை புதூர்நாடு மலைவாழ் மக்கள் வாழக்கூடிய பகுதி. அங்கே 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. மாதத்திற்கு ஒரு முறை ஏலகிரி மலையிலிருந்து வாகனங்கள் மூலமாக (mobile) சென்று வைத்தியம் பார்க்கிறார்கள். சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் சென்று வாரத்திற்கு ஒரு நாள் மட்டும் வைத்தியம் செய்யப்படுகிறது. அங்கே மலைவாழ் மக்கள் துணை வருவாயாக ஆடுகளையும், மாடுகளையும், கோழிகளையும் வளர்த்து வருகிறார்கள். அங்கே 20,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்ற காரணத்தினாலே, கடந்த 10 ஆண்டு காலமாக அங்கே ஒரு மருத்துவமனை வேண்டும் என்பதை நான் கோரிக்கையாக வைத்து வருகிறேன். கடந்த ஆண்டுகூட அமைச்சர் அவர்கள் துவங்குவதாக அறிவித்தார்கள். அந்த அமைச்சரின் பொறுப்பு மாற்றப்பட்டதால், இப்போது உள்ள கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரிடத்திலும் அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, மலைவாழ் மக்களின் நலன் கருதி, அங்கே ஒரு மருத்துவமனையை அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த 3 ஆண்டுகளாக மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய ஊர்களுக்குக் கால்நடைக் கிளை நிலையம் வேண்டுமென்று கேட்டுவருகிறார்கள். நான் முன்னுரிமை அடிப்படையிலே உங்கள் பகுதியில் கால்நடைக் கிளை நிலையம் துவங்குகிறேன் என்று சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு 100 கால்நடைக் கிளை நிலையங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளார்கள். ஆகவே, முன்னுரிமை கொடுக்கின்றேன் என்று சொன்ன அந்த இடங்களுக்கு முன்னுரிமை கொடுத்துவிட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கும் முன்னுரிமை கொடுக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

2010 மே 6]

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோழிப் பண்ணை நிறுவனங்கள் விவசாயிகளைப் பயன்படுத்தி வங்கிகளிலே கடன் வாங்க வைத்து, கோழிக் குஞ்சுகள் விடாததால் கோழி வளர்ப்புத் தொழில் புரிய முடியாமல் இன்றைக்கு ஆயிரக்கணக்கான விவசாயிகள் மிகப் பெரிய நஷ்டத்தில் இருக்கிறார்கள். அவர்கள் சொத்துக்களை அடமானம் வைத்து வங்கிக் கடன் பெற்ற காரணத்தினால், அந்த சொத்துக்களும் இன்றைக்கு முடக்கப்பட்டிருக்கின்றன. விவசாயமும் பண்ண முடியாமல், கோழி வளர்ப்புத் தொழிலும் பண்ண முடியாமல் நடுத் தெருவில் நிற்கக்கூடிய அந்த விவசாயிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கோழிப் பண்ணை நிறுவனங்களையும், விவசாயிகளையும் அழைத்துப் பேசி, அந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-45

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, சிவகங்கை மாவட்டத்திலே 300-க்கு மேற்பட்ட இதுபோன்ற கோழி வளர்க்கும் பண்ணைகள் மூடப்பட்டிருக்கின்றன. தனியார்கள் ஆசை வார்த்தை காட்டி அவர்களிடம் பண்ணைகளை ஆரம்பிக்கச் சொல்லி, மீண்டும் கோழிக் குஞ்சு விடாத காரணத்தினால் அவை எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. அந்த விவசாயிகள் எல்லோரும் என்னிடம் வந்தார்கள். அந்தக் கோழிக் குஞ்சுகள் விடும் உரிமையாளர்களிடம் பல முறை பேச்சுவார்த்தை நடத்தி இருக்கின்றோம். இன்னும் நடத்திக் கொண்டிருக்கின்றோம். அநேகமாகக் கோழிக் குஞ்சுகளை விடுவதற்கு முயற்சிகளை மேற்கொள்வோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.